Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Life in *Kurunthokai*

**J. Merin Jelinda**, Assistant Professor, Tamil Department, Sarah Tucker College, Tirunelveli-7.
ORCiD: https://orcid.org/0000-0003-2807-9307
DOI: 10.5281/zenodo.6622572

## Abstract

*Literature can be said to be a reflection of human life. Sangam literature has a special place in Tamil literature. One of the eight volumes of the book contains a large number of biographies on human life. The first duty of man in his life is charity. Virtue is what is done by the mind, word and deed. It has been pointed out in the summary that all wealth comes in search of itself, not only by enjoying it but also by giving it to others. Husband and wife are the base of the family. Virtue is the foundation of their home. The essay illustrates the significance of the leader and leader of the union living in such qualities as love, virtue, knowledge, and energy. It is the Tamil culture to welcome the guests who come to the house. Such hospitality was more prevalent during the Sangam period. The guests who came to the house were warmly welcomed. The article summarizes the principles and ideas that are essential to everyday life.*

**Keywords:** Virtue, Hospitality, Love, Home.

## References

[1] Thirunana Sampantham. *Nannool Sollatikaram*, Raja Publications, Trichy, 2009
[2] Parimelalagar. *Thirukkura*l, Tirunelveli South, Indian Saiva Nootrandu Publishing House Limited, Chennai, 10th Edition, 1956
[3] Venkatasamy Nattar. *Manimegalai.* Tirunelveli South, Indian Saiva Nootrandu Publishing House Limited, Chennai, First Edition, 1985

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# குறுந்தொகையில் வாழ்வியல்

**ஜெ.மெரின் ஜெலின்டா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி-7.
**ORCiD: https://orcid.org/0000-0003-2807-9307**
**DOI: 10.5281/zenodo.6622572**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் மனித வாழ்வின் பிரதிபலிப்பு எனலாம். தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியம் தனக்கென்று ஓர் தனி இடத்தைப் பிடித்துள்ளது. எட்டுத்தொகை நூல்களின் ஒன்றான குறந்தொகையில் மனிதன் வாழ்வதற்குரிய வாழ்வியல் நெறிகள் அதிகம் இடம்பெற்றுள்ளன. மனிதன் தன் வாழ்வில் செய்ய வேண்டிய முதல் கடமை அறச்செயலே ஆகும். அறம் என்பது மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் செய்யப்படுவதே. செல்வங்களைச் சேர்த்து வைத்து தான் மட்டும் அனுபவிக்காமல், மற்றவர்களுக்கு கொடுக்கும் மனதோடு இருந்தால் அனைத்துச் செல்வங்களும் தானேத் தேடி வரும் என்பதை குறுந்தொகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குடும்பத்தில் ஆணிவேராக இருப்பவர்கள் கணவன், மனைவி. அவர்கள் இல்லறம் நல்லறமாக அமைவதற்கு அடிக்கோலாக அமைவது அறம். அன்பு, அறம், அறிவு, ஆற்றல் போன்ற பண்புகளில் ஒன்றிய தலைவனும் தலைவியும் வாழும் சிறப்பினைக் குறுந்தொகை விளக்குகிறது. இற்புறம் நாடி வரும் விருந்தினரை வரவேற்பது தமிழர் பண்பாடு. அப்படிப்பட்ட விருந்தோம்பல் சங்க காலத்தில் அதிகம் காணப்பட்டது. வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்றனர். அன்றாட வாழ்விற்கு இன்றியமையாத அறவுரைகளையும், உயர்ந்தக் கருத்துக்களையும் குறுந்தொகை எடுத்துக்கூறுகிறது.*

**திறவுச்சொற்கள்:** அறம், விருந்தோம்பல், அன்பு, இல்லறம்

**முன்னுரை**

தமிழர்கள்அனைவரும் தொன்மை வாய்ந்த இலக்கியம் என்று பெருமையுடன் கூறிக் கொள்வது சங்க இலக்கியம். தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியம் தனக்கென்று ஓர் தனி இடத்தைப் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களுள் எட்டுத்தொகை நூல்களில் ஒன்று குறுந்தொகை.குறுந்தொகையில் மனிதன் வாழிவதற்குரிய வாழிவியல் நெறிகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. சங்ககாலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல். சிந்தனைகள் குறுந்தொகை வழி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**அறம்**

மனிதன் தன் வாழ்வில் செய்ய வேண்டிய முக்கியமான செயல் அறம். அறம் என்பது சொல்லாலும் செயலாலும் மனதாலும் ஒருவருக்கு செய்யப்படுவதே. செல்வங்களை சேர்த்து வைத்து தான் மட்டும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் மற்றவர்களுக்கு கொடுக்கும் மனத்தோடு இருந்தால் மதிப்பும் செல்வமும் தானா தேடி வரும்.அறத்தின் பால் ஈடுபாடு கொண்டு அதன்படி செயல்படுவர்களுக்குதான் சிறப்பும் செல்வமும் வந்து சேரும்.

**"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு" (குறள். 31)**

என்கிறார் வள்ளுவர்.நாம் முடிந்த வரை பிறருக்கு கொடுத்து வாழ்தல் வேண்டும்.

**“ஈ தா கொடு வெறும் மூன்றும் முறையே**

**இழந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்புரை” (நன்னூல் சொல்லதிகாரம் நூ. 435)**

என்றும் நன்னூல் சொல்லதிகாரம் பொதுவியல் நூற்பாவாலும் நன்கு உணரலாம். குறுந்தொகையில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கு என்று அறங்களைப் பேணிக்காத்துள்ளனர். தங்களால் இயன்ற அளவு பிறருக்குப் பொருட்களைக் கொடுத்து ஈகைப் பண்பில்தலைசிறந்தவர்களாக வாழ்ந்தனர். இல்லையென்று வருவோருர்க்கு இருப்பதைக் கொடுப்பதுதான் மிக உயரிய பண்பு. இல்லை என்று துன்பத்தால் வருந்தி இரந்து கேட்ட ஒருவருக்குக் கொடுத்தப் பொருட்களைத் திரும்ப பெறக்கூடாது.கேட்கவும் கூடாது. அவ்வாறு கேட்பதை விட உயிரை விடலாம் என்பதை

**“இருக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய**

**கொடுத்தவை தாவென் செல்லினும்**

**இன்னா நோநம் இன்னுயிர் இழப்பே” (குறுந்-349)**

இப்பாடல் வழி அறிய முடிகிறது.

**இல்லறம்**

இல் அறம் இல்லறம்.சங்ககால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றி பேணி வளர்த்தனர்.அன்பும் அறனும் இல்லத்தாரின் தலைமைப் பண்புகளாக வள்ளுவர் கூறியுள்ளார்.

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது” (குறள். 45)**

சமுதாயத்தில் உயிர் நாடியாக விளங்குவது குடும்பம். குடும்பத்தில் ஆணிவேராக இருப்பவர் கணவன் மனைவி ஆவர். இல்லறம் நல்லறமாக இருக்க வேண்டுமென்றால் கணவன் மனைவி அறவழியில் செயல் பட வேண்டும். அன்பு அறிவு ஆற்றல் போன்ற பண்புகளில்ஒன்றிய தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் சிறப்பினைக் குறுந்தொகைப் பாடல்கள் போற்றி புகழ்கின்றது. பொருள் ஈட்டுவதின் தேவையையும் ஈட்டியப்பொருளை வைத்து எவ்வாறு குடும்பம நடத்த வேண்டும் என்ற கருத்தினையும் குறுந்தொகையில்காணலாம். ஒரு பசுவினை மட்டும் வளர்த்து அதனால் வரும் ஆதாயத்தைக்கொண்டு எளிய வாழ்வு நடத்திய தலைவன் தலைவியை மணந்த நாள் முதலாகப்பெருவாழ்வுப் பெற்றான். தன்னிடம் உள்ள வருமானத்தை வைத்து இனிதாக இல்லறம் நடத்தினாள் தலைவி என்பதை

**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**

**பெருநலக் குறுமகள் வந்தென**

**இனிவிழ வாயிற் றென்னுமவ் வுரே (குறுந் -295)**

இப்பாடல் வரி விளக்கிறது. தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் வாழ்ந்து வளர்ந்தவள். சமையல் அறியாதவளாய் இருப்பினும் தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆசை கொண்டவளாய் தயிர் குழம்பைத் தயார் செய்கிறாள். தோய்ந்த கட்டித் தயிரைக் கையிற் பிசைந்து கையைக் கழுவாமல் அப்படியே தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள் .குழம்பைத் தாழ்க்கும் போது ஏற்பட்ட புகை அவளது மையுண்ட கண்களைக் கலங்கச் செய்தது. தலைவி சமைத்ததைத் தலைவனுக்கு அன்பாக பரிமாறுகிறாள். தலைவன் மிகவும் இனிதாக உள்ளதாகப் பாராட்டி உண்டு மகிழ்கின்றான். தலைவியின் உள்ளம் மகிழ்கிறது என்பதை,

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**

**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இன்தெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே (குறுந் -167)**

தலைவி சமைக்கும்உணவு எத்தன்மையாக இருப்பினும் .தலைவன் இனிது என்று பாராட்டி உண்டு மகிழ்கின்றான் .கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் புரிந்து அன்புடன் வாழ்வதை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

**விருந்தோம்பல்**

இல்லம் நாடி வரும் விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்பது தமிழர் பண்பாடு. பண்டைய தமிழர்களின் அடையாளமாகக் கருதப்படுவது விருந்தோம்பல். ஏழ்மையிலும் கூட ஒரு பகுதி தானியத்தைப் பயன்படுத்தாமல் பாதுக்காத்து வைத்து வழிப்போக்கருக்கு படைத்திடும் பழக்கம் சங்ககாலத்தில் காணப்படுகிறது.விருந்தினரை பசியோடு இருக்க வைத்துவிட்டு தான்மட்டும் உண்ணக்கூடாது என்பதை

**விருந்து புறத்ததாத் தாணுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று (குறள். 82)**

சங்க காலத்தில் விருந்தோம்பல் ஒரு கலையாக பேணப்பட்ட நிலை உள்ளது. இல்லத்திற்கு வருவோர் அகம் மகிழ மனமுவந்து அமுது படைப்பதை நெய்யோடு வெண்ணெய் அரிசியால் சமைத்த வெம்மையான சோற்றையும் ஏழு கலங்களில் இட்டு காக்கைக்கு உணவு வைத்தல் என்பதை

**ஏழுகலத்து ஏந்தினும் சிறிது –என் தோழி**
**பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு**
**விரந்து வரக் கரைந்த காக்கையது பலியே ( குறுந்-210)**

பாடல் வரி விளக்குகிறது. ‘‘விருந்தோம்பல்’’என்பது இல்லம் தேடிவரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும்.பசித்து வருவோருக்கு உணவு அளிப்பதை உயிர் கொடுப்பதாகக் கருதுகிறது சங்க இலக்கியம் இதனை ‘‘உண்டிக் கோடுத்தோர் உயிர் கொடுத்தோரே’’ (மணிமேகலை பா. 11)

என்பதை மணிமேகலை விளக்குகிறது.

**முடிவுரை**

அன்றாட வாழ்விற்கு இன்றியமையாத அறவுரைகளையும் உயர்ந்த கருத்துகளையும் குறுந்தொகை எடுத்துகூறுகிறது .இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும் இணைந்து பலஅறச் செயல்களை செய்துள்ளனர்.மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் பண்பில் தலைசிறந்தவர்களாக விளங்கிளர்.தமிழர் பண்பாடுகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக விருந்தோம்பல் குறுந்தொகையில் சிறப்பிடம் பெறுகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] திருஞான சம்பந்தம். *நன்னூல் சொல்லதிகாரம்*, ராஜா பப்ளிகேசன்ஸ், திருச்சி, 2009.
[2] பரிமேலழகர். *திருக்குறள்*. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

லிமிடெட், சென்னை, 1956.

[3] வேங்கடசாமி நாட்டார். *மணிமேகலை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1985.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.